# மொழியியல் நோக்கில் இலக்கணமும் இலக்கண மரபுகளும்

**எம். ஏ. நுஃமான்**
manuhman@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நவீன மொழியியல் நோக்கில் இலக்கணம், இலக்கண மரபுகள் பற்றியும், இலக்கண மரபில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இலக்கணம் என்றால் என்ன? இலக்கண மரபுகள் எவ்வாறு உருவாகின்றன? இலக்கண மரபுகளில் மாற்றத்துக்கான தேவை என்ன? முதலிய வினாக்கள் இக்கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றன. எழுதப்பட்ட இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளவையே இலக்கணம் என்றும், அவை மீறப்பட முடியாத விதிகள் என்றும், அத்தகைய நூல்கள் இல்லாத மொழிகளுக்கு இலக்கணம் இல்லை என்றும், அத்தகைய நூல்களைப் படியாதவர்களுக்கு இலக்கணம் தெரியாது என்றும் பொதுவாகக் கருதப்படுகின்றது. நவீன மொழியியல் இதனை ஏற்பதில்லை. மொழியின் உள்ளார்ந்த அமைப்பே இலக்கணம் என்றும், இலக்கணம் இல்லாத மொழிகள் எவையும் இல்லை என்றும், ஒரு மொழியைத் தாய்மொழியாகப் பேசுவோர் சிறுவயதிலிருந்தே அந்த மொழியின் அமைப்பை உள்வாங்கிக் கொள்கின்றனர் என்றும், அவ்வகையில் ஒரு மொழியைத் தாய்மொழியாகப் பேசுவோருக்கு அம்மொழியின் இலக்கணம் நன்கு தெரியும் என்றும் மொழியியலாளர் நிறுவியுள்ளனர். தாய்மொழியாளரின் மூளையில் பதிந்துள்ள இந்த இலக்கணத்தை அக இலக்கணம் (Implicit Grammar) என்றும் அவர்கள் அழைப்பர். இலக்கணகாரர்கள் தாய்மொழியாளரின் மூளையில் பதிந்துள்ள இந்த அக இலக்கணைத்தைப் பகுப்பாய்வு செய்து, அதன் விதிகளைக் கண்டறிந்து நூலாக எழுதுவதையே நாம் பொதுவாக இலக்கணம் என்கிறோம். இதை மொழியியலாளர் புற இலக்கணம் (Explicit Grammar) என்பர். இவ்வாறு எழுதப்படும் புற இலக்கணங்கள் இலக்கண ஆசிரியர்களின் தேவை, திறமை, கருத்துநிலை, காலம் என்பனவற்றுக்கு ஏற்ப வேறுபடும். இவ்வாறு வெவ்வேறு இலக்கண ஆசிரியர்கள் ஒரு மொழியின் இலக்கண அமைப்பை எவ்வாறு விளக்கிவந்துள்ளனர்? எத்தகைய வகைப்பாடுகளை மேற்கொண்டனர்? எத்தகைய கலைச் சொற்களைப் பயன்படுத்தினர் போன்ற விடயங்கள் இலக்கண மரபு எனப்படும். இவ்வகையில் ஒரு மொழியின் இலக்கண மரபுகள் வேறுபடுவதைக் காண்கின்றோம். இவ்வாறு நோக்கும் போது இலக்கண மரபு நிலையானது அல்ல. அது காலப்போக்கில் மாறக்கூடியது. தமிழ் இலக்கண மரபும் அவ்வாறே மாறிவந்துள்ளது. தமிழ் இலக்கண ஆசிரியர் மத்தியில் சில பொதுத் தன்மைகளும் வேறுபாடுகளும் இருப்பதை தொல்காப்பியம் முதல் தொன்னூல் விளக்கம் வரை நாம் காணலாம். மொழி மாறும்போது இலக்கண அமைப்பும் மாறுகின்றது. அதற்கேற்ப இலக்கண மரபிலும் மாற்றம் ஏற்படுவது இயல்பே. தமிழ் இலக்கண மரபைப் புரிந்துகொள்வதற்கும் அதை வளப்படுத்துவதற்கும் மொழியியல் அறிவு அவசியமாகும்.

**திறவுச்சொற்கள்:** நவீன மொழியியல், இலக்கணம், அக இலக்கணம், புற இலக்கணம், இலக்கண மரபு, மரபு மாற்றம்.

இலக்கணம், இலக்கண மரபுகள் என்பன பற்றி நம் மத்தியில் பலவகையான கருத்துகள் நிலவுகின்றன. அவற்றுள் பல அறிவியல்ரீதி அற்றவையாகவும், மொழி மாற்றம், மொழிவளர்ச்சி என்பவற்றுக்கு எதிரானவையாகவும் உள்ளன. அவ் வகையில் மொழிபற்றிய நவீன விஞ்ஞான மான மொழியியல் நோக்கில் அவற்றைப் பரிசீலித்து மொழியியல் அடிப்படையில் அவற்றைத் தெளிவுபடுத்துவது இக் கட்டுரையின் நோக்கமாகும். இலக்கணம் என்றால் என்ன? இலக்கண மரபுகள் எவ்வாறு உருவாகின்றன? இந்த மரபுகளில் மாற்றத்துக்கான தேவை என்ன? முதலிய கேள்விகள் இக்கட்டுரையில் விவாதிக் கப்படுகின்றன.

**இலக்கணம் பற்றிய பொதுக் கருத்து**

முதலில் இலக்கணம் என்றால் என்ன என்ற கேள்விக்கு வருவோம். ஆங்கிலத்தில் இலக்கணம் பற்றி ஒரு நூல் எழுதிய ஃப்றங் பாமர் (1971) என்ற மொழியியலாளர் இச்சொல் சாதாரண பேச்சில் வெவ்வேறு வகையில் பயன்படுத்தப்படுவதனால் இதுபற்றிப் பெருமளவில் கருத்துக் குழப்பம் நிலவுகின்றது என்று கூறுகின்றார். மேலை நாடுகளில் மட்டுமன்றி, நம் மத்தியிலும் அத்தகைய பல குழப்பங்கள் நிலவுகின்றன. இலக்கணம் பற்றிப் பொதுவாக நம் மத்தியில் பேசப்படும் கருத்து பின்வருமாறு. "ஒரு மொழியைப் பிழையின்றிப் பயன் படுத்துவதற்காக மொழிப்புலமை மிக்க முன்னோர்களால் வகுத்துக் கொடுக்கப்பட்ட விதிமுறைகளே இலக்கணம்" இத்தகைய விதிகளை வகுத்துக்கொடுக்கும் நூல்களே இலக்கண நூல்கள் எனப்படுகின்றன. ஆறுமுகநாவலர் இலக்கணச் சுருக்கம் என்ற தனது நூலின் தொடக்கத்திலேயே இதுபற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

"இலக்கண நூலாவது உயர்ந்தோர் வழக்கத்தையும், செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுதுதற்கும் பேசுதற்கும் கருவியாகிய நூலாம்".

இங்கு இலக்கணம் என்பது அதுபற்றி எழுதப்பட்ட நூல்களையும் அதில் கூறப்பட்டுள்ள விதிகளையும் குறிக்கின்றது. இத்தகைய நூல்களைக் கற்காதவர்களுக்கு இலக்கணம் தெரியாது என்றும், இத்தகைய நூல்கள் இல்லாத மொழிகள் இலக்கணம் இல்லாத மொழிகள் என்றும் பொதுவாகக் கருதப்படுகின்றது. இப்படிப் பார்த்தால் உலகில் உள்ள மிகப் பெரும்பாலான மொழிகளுக்கு இலக்கணம் இல்லை என்றும், மிகப் பெரும்பாலான மக்களுக்குத் தங்கள் மொழியின் இலக்கணம் தெரியாது என்றும் நாம் முடிவுக்குவர வேண்டும்.

இன்று உலகில் சுமார் ஏழு கோடித் தமிழர்கள் வாழ்கிறார்கள். இவர்களுள் எத்தனை வீதமானவர்கள் தமிழ் இலக்கண நூல் ஒன்றையாவது படித்திருக்கிறார்கள்? எத்தனை வீதமானோருக்குத் தமிழ் இலக்கணம் தெரியும்? படிப்பறிவற்ற அல்லது அரைகுறைப் படிப்பறிவுள்ள தமிழர்களுக்குத் தமிழ் இலக்கணம் தெரியுமா? தமிழை ஒரு பாடமாகப் பயிலாத தமிழ் பேசும் பல்கலைக்கழக பட்டதாரிகளின் நிலை என்ன? தமிழ்ப் பேராசிரியர்கள் தவிர்ந்த, புவியியல், பொருளியல், பொறியியல், மருத்துவம் போன்ற பிற துறைகளில் தேர்ச்சிபெற்ற தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பேராசிரியர்களுக்குத் தமிழ் இலக்கணம் தெரியுமா? அவர்களிடம் கேட்டால் தாங்கள் தமிழ் இலக்கணம் படிக்கவில்லை, தங்களுக்குத் தமிழ் இலக்கணம் தெரியாது அல்லது அது கொஞ்சம்தான் தெரியும் என்றே சொல்கிறார்கள். பெரும்பாலான

நவீன தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்களின் நிலையும் இதுதான். இவர்களிடம் இக்கேள்வியைக் கேட்டால் தங்களுக்குத் தமிழ் இலக்கணம் கொஞ்சம்தான் தெரியும் அல்லது தெரியாது என்றுதான் சொல் வார்கள்.

அப்படியானால், யாருக்குத் தமிழ் இலக்கணம் நன்கு தெரியும்? பண்டிதர்கள், புலவர்கள், தமிழறிஞர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள் போன்ற தமிழ் இலக்கண நூல்களைத் தனித் துறையாகக் கற்றுத் தேர்ந்த ஒரு சிறுபான்மையினருக்குத்தான் தமிழ் இலக்கணம் நன்கு தெரியும். அவர்கள்தான் இலக்கணம் பற்றிய நமது வினாக்களுக்கு விளக்கம் சொல்லக் கூடியவர்கள். இதுதான் நம் மத்தியில் நிலவும் இலக்கணம் பற்றிய பொதுவான பார்வை. இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள மொழிவிதிகள், பயன் படுத்தப்பட்டுள்ள கலைச்சொற்கள் பற்றிய அறிவுதான் இலக்கண அறிவு என்ற பொதுக்கருத்தின் வெளிப்பாடுதான் இது.

இந்தப் பொதுக்கருத்தின் அடிப்படை யில்தான் பள்ளிகளில் நாம் இலக்கணம் கற்பிக்கின்றோம். பள்ளியில் நாம் கற்பிக்கும் இலக்கணம் நன்னூலில் கூறப்பட்டுள்ள இலக்கணம்தான். நன்னூலில் கூறப்பட்டுள்ள இலக்கண விதி களையும், சொல்வகைப்பாடுகளையும், அவை தொடர்பான கலைச் சொற் களையுமே நாம் கற்பிக்கின்றோம். பெயர், வினை, இடை, உரி, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல், முதலெழுத்து, சார்பெழுத்து, குற்றிய லுகரம், குற்றியலிகரம், வேற்றுமைப் புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சி, தொகை நிலைத் தொடர், தொகாநிலைத் தொடர், ஆகுபெயர், அன்மொழித்தொகை, தெரிநிலைவினை குறிப்புவினை போன்றவை இதில் அடங்கும். இவைபற்றிய அறிவே இலக்கண அறிவு என்று நாம் பொதுவாகக் கருதுகிறோம். இந்த நூல்கள் கூறும் இலக்கண விதிகள் மொழிக்கு அமைத்துக்கொடுக்கப்பட்ட வரம்பு என்றும், தொடர்ந்தும் பேணப்பட வேண்டியவை என்றும், இவற்றை மீறினால் மொழி சிதைந்துவிடும் என்றும் நாம் கருதுகிறோம். இது இலக்கணம்பற்றி பாரம்பரியமாக நம்மத்தியில் வழங்கப்படும் பொதுப் பார்வை எனலாம்.

**மொழியியல் நோக்கில் இலக்கணம்**

நவீன மொழியியலாளர் இக்கருத்தைப் பொதுவாக ஏற்றுக்கொள்வதில்லை. அவர்களைப் பொறுத்தவரை இலக்கணம் என்பது ஒரு மொழியின் உள்ளார்ந்த அமைப்புவிதிகளைக் குறிக்கும். மொழியின் அமைப்பையே அவர்கள் இலக்கணம் என்று சொல்வர். ஒரு மொழியைத் தாய் மொழியாகப் பேசும் ஒருவருக்கு அந்த மொழியின் அமைப்புவிதிகள் பற்றிய அறிவு உண்டு. அந்த அறிவு இல்லாமல் அவரால்அந்த மொழியைப் பேச முடியாது.

அவ்வகையில் பார்த்தால் உலகில் இலக்கணம் இல்லாத மொழிகள் என்று எவையும் இல்லை. எழுத்து வழக்கில் உள்ள மொழி, எழுத்து வழக்கில் இல்லாத மொழி என்ற வேறுபாடு இங்கு இல்லை. ஒரு மொழியைப் பேசத் தெரிந்த ஒருவர் அந்த மொழியின் இலக்கண அறிவு உடையவரே. இலக்கண அறிவு இல்லாத மனிதர்கள் என்று யாரும் இல்லை.

குறைபாடுகள் எவையும் இல்லாத ஒரு இயல்பான ஐந்து வயதுக் குழந்தை தனது தேவைகள், உணர்வுகள் எல்லாவற்றையும் தனது மொழியில் சரளமாக, பிழைகள்

எவையுமின்றிப் பேசும் திறன் பெற்றதாக இருக்கும். தன் மொழியின் அடிப்படை அமைப்புகளில் அது நன்கு தேர்ச்சி பெற்றுக் கொண்டது என்பதே இதன் பொருளாகும். அதாவது தன் தாய்மொழியின் இலக்கணத்தை அது தன்வயப்படுத்திக் கொள்கின்றது. இது தொடர்பாக அமெரிக்க மொழயியல் அறிஞர் ஹாக்கற்றின் கருத்து இங்கு மனங்கொள்ளத் தக்கது. “நான்கில் இருந்து ஆறு வயதுவரையுள்ள ஒரு இயல்பான குழந்தை மொழியியல் அடிப்படையில் வளர்ந்தவனே (linguistically adult) ஆவான். ஏதாவது சில புறநடைகளைத் தவிர அம்மொழியின் ஒலியன் அமைப்பை (phonemic system) அவன் தன்வயப்படுத்திக் கொள்கிறான். அதன் அடிப்படை இலக்கணத்தை முயற்சியில்லாமல் அவன் கையாள்கின்றான். அம்மொழியின் அடிப்படைச் சொற்தொகுதியை அவன் அறிந்திருக்கிறான். அதைப் பயன்படுத்துகிறான்” என அவர் கூறுகின்றார் (Hockett, 1970). ஹாக்கற்றின் இக்கூற்று முக்கியமானது. பாடசாலை செல்லும் முன் உள்ள குழந்தையின் மொழி அறிவை, இலக்கண அறிவை இது நன்கு வெளிப்படுத்துகின்றது. “மிகவும் சிக்கலான வாக்கியக் கோலங்களைப் பொறுத்தவரை ஹாக்கற்றின் இக்கூற்று சிலவேளை மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடும் எனினும், நிச்சயமாக ஆறு வயது நிரம்பிய ஒரு குழந்தைக்கு பெயர்ச் சொற்களின் பன்மையாக்கத்தின் கிரமமான சொல்லுருமாற்று வடிவங்களை (Regular inflectional patterns) எவ்வாறு கையாள்வது என்றும், இறந்தகால வினைவடிவங்களை எவ்வாறு அமைப்பது என்றும் தெரியும். மேலும் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை, பெயரடை பெயர் முதலிய அமைப்புடைய சொற்தொடர்க் கோலங்கள் அவனுள் திடப்பட்டு விடுகின்றன” என்று மாக்வார்ட் (Marckward, 1973) என்னும் அறிஞர் கூறுகின்றார். இவ்வாறு அந்தக் குழந்தை பேசும் மொழி அது பிறந்து வளரும் அதன் சமூக பண்பாட்டுச் சூழலில் வழங்கும் கிளைமொழியாகவே இருக்கும்.

பாடசாலைக்குப் போய்ப் படிக்கா விட்டாலும், எழுத வாசிக்கத் தெரியா விட்டாலும், இலக்கண நூல்களைக் கற்கா விட்டாலும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஒருவர் “நான் வந்தான்” என்றோ “நீ வந்தாள்” என்றோ பேசமாட்டார். பதிலாக “நான் வந்தேன்“ “ நீ வந்தாய்” என்றே பேசுவார். தமிழில் இவ்வாறுதான் பேசவேண்டும் என்பது அவருக்குத் தெரியும். இந்த அறிவு தாய்மொழியாளனின் மூளையில் ஆழப் பதிந்திருக்கும் அறிவு. தனது மொழி அமைப்புப் பற்றிய இலக்கண அறிவு. இதை நாம் அறியா அறிவு (implicit knowledge) எனலாம். மொழியில் மறைந்திருக்கும் இந்த அமைப்பு விதிகளை - இலக்கணத்தை மொழியியலாளர் அக இலக்கணம் (implicit grammar) என்பர்.

இலக்கண ஆசிரியன் அல்லது மொழியியலாளன் என்ன செய்கிறான்? தாய்மொழியாளனின் அறியா அறிவை அறிந்த அறிவாக (explicit knowledge) மாற்றுகிறான். அக இலக்கணத்தைப் புற இலக்கணமாக (explicit grammar) மாற்றுகிறான். பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட மொழித் தகவலை - அதன் அமைப்பைக் கூறுபடுத்தி, பகுப்பாய்வு செய்து, அக்கூறுகளுக்கிடையே உள்ள தொடர்புகளை, அவற்றின் விதிகளைக் கண்டறிந்து அவற்றை இலக்கண விதிகளாக வகுத்துக் கூறுகின்றான். மொழிக்கூறுகளை அவற்றின் அமைப்பை விளக்குவதற்கு வேண்டிய கலைச் சொற்களைப் பயன்படுத்துகின்றான்.

இவ்வகையில், முன்கூறப்பட்ட வாக்கியங்களில் உள்ள நான் - நீ என்பன மூவிடப் பெயர்கள் என்றும், வந்தேன் - வந்தாய் என்பன வினைமுற்றுகள் என்றும் அடையாளப்படுத்துவான். நான் தன்மை ஒருமை என்றும், நீ முன்னிலை ஒருமை என்றும் வகைப்படுத்துவான். பெயருக்கும் வினைக்கும் இடையே எழுவாய், பயனிலை உறவு இருக்கிறது என்று கூறுவான். எழுவாய் தன்மை ஒருமையாதாயின் வினை -ஏன் என்ற விகுதி பெறும் என்றும், எழுவாய் முன்னிலை ஒருமையதயின் வினை -ஆய் என்ற விகுதிபெறும் என்றும் விதி கூறுவான். தாய்மொழியாளனின் அறியா அறிவை - அக இலக்கணத்தைக் கண்டறிந்து வெளிப்பட விபரிக்கும் முயற்சியே இது. இதைத்தான் மொழியியலாளர் புற இலக்கணம் என்பர். எழுதப்பட்ட இலக்கண நூல்கள் எல்லாம் புற இலக்கணங்களே.

இந்த இலக்கண நூல்கள் மொழியில் இல்லாத எதையும், புதிதாக எதையும் உருவாக்கித் தருவதில்லை. மொழியில் மறைந்திருக்கும் அதன் உள்ளார்ந்த விதிகளைப் பகுப்பாய்வின் மூலம் கண்டு பிடித்து அவற்றை வெளிப்படுத்துகின்றன. அவை மொழிக்குப் புதிதாக வரம்பு கட்டுவதில்லை. மொழியில் ஏற்கனவே மறைந்திருக்கும் வரம்பை, வரையறைகளை, விதிகளை வெளிப்படுத்துகின்றன. தாய்மொழியாளனின் அறியா அறிவை அறிந்த அறிவாகத் தருகின்றன. வேறுவகையில் சொன்னால் மொழியின் அக இலக்கணத்தைப் புற இலக்கணமாக மாற்றித்தருகின்றன.

“மொழி என்பது விதிகளால் ஆளப்படும் ஒரு முறைமை” (Language is a rule governed system) என்று நோம் சொம்ஸ்கி கூறுகிறார். இந்த அமைப்பு முறையை, அதன் விதிகளைக் கண்டுபிடித்துச் சொல்வதுதான் இலக்கண ஆசிரியனின் வேலை. இல்லாத ஒன்றை அவன் உருவாக்கித் தருவதில்லை. இதை விளக்குவதற்கு இரண்டு உதாரணங்களை மட்டும் இங்கு தருகிறேன்.

1. வினையில் தோன்றும் பாலறி கிளவியும் பெயரில் தோன்றும் பாலறி கிளவியும் மயங்கல் கூடா தம் மரபினவே (தொல். சொல்.11)

இது எழுவாய் பயனிலை இயைபு பற்றிப் பேசும் தொல்காப்பியச் சூத்திரம். வினையில் தோன்றும் பால் உணர்த்தும் உருபும், பெயரில் தோன்றும் பால் உணர்த்தும் உருபும் மயங்கல் கூடாது. இரண்டும் ஒன்றாகவே இருக்கவேண்டும். இது தொன்றுதொட்டு வரும் மரபு என்பது இதன் பொருள். இந்த விதி தமிழ் மொழியின் ஒரு அடிப்படை இலக்கண விதி. இந்த விதியைத் தொல்காப்பியர் எவ்வாறு உருவாக்கியிருப்பார்? ஒரு தொகை தமிழ் வாக்கியங்களை அவதானித்து, அவற்றைத் தரவுகளாகக் கொண்டு, அவற்றைப் பகுப்பாய்வு செய்துதான் இந்த முடிவுக்கு அவர் வந்திருப்பார். எடுத்துக்காட்டாக பின்வரும் வாக்கியங்களைப் பார்க்கலாம்.

அவன் வந்தான் - அவள் வந்தாள்
அவர் வந்தார் அது வந்தது அவை வந்தன

இவ்வாக்கியங்கள் எழுவாய் பயனிலை இயைபைக் காட்டுகின்றன. எழுவாய்ப் பெயர் எந்தப் பாலுக்குரியதோ பயனிலையாக வரும் வினை அதே பாலக்குரிய விகுதியைக் கொண்டுள்ளது. இது மாறி அமைய முடியாது. இது தமிழில் ஒரு மாறா விதியாக உள்ளது. சங்கத் தமிழில் இருந்து தற்காலத் தமிழ் வரை இதில் மாற்றம் இல்லை. தொல்காப்பியம் தோன்ற முன்பிருந்தே இது தமிழின் ஒரு அடிப்படை இலக்கண விதியாகச் செயற்பட்டு வருகின்றது. இந்த விதியைத் தன் பகுப்பாய்வின் மூலம்

கண்டறிந்து அதற்கு ஒரு சூத்திர வடிவம் கொடுத்தது தான் தொல்காப்பியரின் பணி. “இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்புதல்” என்பதன் பொருள் இதுதான். இலக்கணம் கண்டு அதற்கு இலக்கியம் இயம்புதல் அல்ல. ஆயினும் இச்சூத்திரத் துக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் இச் சூத்திரத்தின் விளக்க முறையை (descriptive method) புறக்கணித்து “இச் சூத்திரத்தால் திணையும் பாலும் இடமும் காலமும் வழுவாமற் காத்தார்” என இதற்கு ஒரு விதிமுறை (prescriptive) முக்கியத்துவத்தை வழங்குகின்றார்.

2. இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
   உயிர் வழி வவ்வும் ஏமுன்
   இவ்விரு மெய்யும் உடம்படு
   மெய்யென்றாகும்
   (நன்னூல். உயிரீற்றுப் புணரியல் சூ. 12 )

இது உயிர்முன் உயிர் புணரும்போது உடம்படு மெய் தோன்றுதல் பற்றிய விதிகூறும் நன்னூல் சூத்திரம். இ, ஈ, ஐ ஆகிய உயிர்களை இறுதியாகக் கொண்ட நிலைமொழிமுன் உயிர் எழுத்துகளை முதலாகக் கொண்ட வருமொழி புணரும் போது யகர மெய் உடன்படு மெய்யாகத் தோன்றும் என்பதும், ஏனைய உயிர்களை ஈறாகக் கொண்ட நிலை மொழிமுன் உயிர் எழுத்துகளை முதலாகக் கொண்ட வருமொழி புணரும்போது வகரமெய் உடன்படுமெய்யாகத் தோன்றும் என்பதும், ஏகார ஈற்றின் முன் வகரம் அல்லது யகரம் உறழ்ந்து வரும் என்பதும் இச்சூத்திரத்தின் பொருள். இந்த விதி நன்னூலாசிரியரின் கற்பனையில் உதித்த ஒன்றல்ல. நெடுங் காலமாகத் தமிழ் மொழியில் இருந்துவந்த ஒரு அமைப்பு விதிதான். இதே விதியை நன்னூலுக்கு முந்திய வீரசோழியமும் (காரிகை 13) கூறுகின்றது.

இதைத் தொல்காப்பியரும் கூறுகிறார்.

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல்
வரையார் (எழுத்து. 141)

எல்லாச் சொற்களிலும் உயிர் ஈற்றின்முன் உயிர் வரும்போது உடம்படுமெய் தோன்றும் என்பது இதன் சாரம். உடம்படு மெய் என்பது எது? எந்த எந்த சூழ்நிலைகளில் எந்த எந்த மெய் உடம்படுமெய்யாக வரும் என்பதையெல்லாம் தொல்காப்பியர் கூறவில்லை. அந்தப் பகுப்பாய்வுக்கு அவர் செல்லவில்லை தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய இளம்பூரணர்தான் இதுபற்றி விரிவாக ஆராய்ந்து, உரையில் கோடல் என்னும் உத்தியைப் பயன்படுத்தி ”உடம்படு மெய்யாவன யகரமும் வகரமும் எனக் கொள்க. இகரவீறும் ஈகாரவீறும் ஐகாரவீறும் யகரவுடம்படுமெய் கொள்வன. அல்லனவெல்லாம் வகர மெய் கொள்வன” என்று கூறுகிறார். இவரும் ஏகாரத்தின்முன் இரண்டும் உறழ்ந்துவரும் என்று கூறவில்லை. பிற்காலத்தில் அந்த விதி விலக்கையும் அவதானித்த வீரு சோழியரும் நன்னூலாரும்தான் இளம்பூரணரின் கூற்றைத் தழுவி மேற்காட்டிய சூத்திரத்தை உருவாக்கித் தந்துள்ளனர். இந்த விதி இலக்கண ஆசிரியர்கள் எழுத முன்பே பண்டைக்காலம் முதல் தமிழில் வழங்கி வந்த விதிதான். தமிழ் மக்களின் அக இலக்கணத்தில் அவர்கள் அறியா அறிவாக இருந்த விதிதான். தங்கள் பகுப்பாய்வின் மூலம் அதனைக் கண்டுபிடித்துச் சூத் திரமாக - புற இலக்கணமாக உருவாக்கித் தந்தமைதான் அவர்களுடைய பணி.

இவ்வகையில் மொழியின் உள்ளார்ந்த அமைப்பு விதிகளைக் கண்டறிந்து அவற்றை வெளிப்பட விபரிப்பவன்தான் இலக்கண ஆசிரியனே தவிர மொழிக்கு வரம்புகட்டுபவன் அல்ல என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

நாம் இதுவரை நோக்கியதிலிருந்து மொழியியல் நோக்கில் இலக்கணம் என்பதை அக இலக்கணம், புற இலக்கணம் என இருவகைப்படுத்தலாம் எனப் பார்த்தோம். அக இலக்கணம் என்பது எழுதப்படா இலக்கணம். ஒரு மொழியைத் தாய் மொழியாகப் பேசுவோரின் மூளையில் பதிவுசெய்யப்பட்டுள்ள அம்மொழியின் அமைப்பு விதிகளின் தொகுதி. இது பள்ளியிலோ வேறெங்குமோ கற்றறியப் படுவதல்ல. மொழித் தேட்டத்தின் (language acquisition) ஊடாக அவர்கள் பிரக்ஞை இன்றி இயல்பாகப் பெற்றுக் கொள்வது.

புற இலக்கணம் என்பது எழுதப்பட்ட இலக்கணம். அது அக இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டது. அக இலக் கணத்தில் மறைந்துள்ள, அறியப்படாத, மொழியின் அமைப்பு விதிகளைப் பகுப்பாய்வின் மூலம் கண்டறிந்து அவற்றை விபரிப்பது. கற்றல், கற்பித்தல் போன்ற பல்வேறு தேவைகளுக்காக எழுதப்படுவது. மனிதர்களின் ஆய்வறிவு வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் அதன் வெளிப்பாடாகத் தோன்றுவது. உலகில் எழுதப்பட்ட இலக்கணங்களுக்கு கூடிய பட்சம் ஒரு நாலாயிரம் ஆண்டு வரலாறுதான் உண்டு. எழுத்து மொழியே சுமார் ஐயாயிரம் ஆண்டு கால வரலாறு உடையதுதான். அதற்கு முன்பிருந்தே மனிதர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக மொழியைப் பேசி வருகின்றனர். அந்த மொழிகள் எல்லாம் எழுதப்படாத அக இலக்கணத்தைக் கொண்டவை. அதைப் பகுப்பாய்வு செய்து அதற்குரிய புற இலக்கணத்தை உருவாக்குவதற்கு மனித அறிவும், நாகரீகமும் ஒரு உயர்கட்ட வளர்ச்சி அடையவேண்டி இருந்தது. வளர்ச் சியடைந்த சமூகங்கள் மத்தியிலலேயே இத்தகைய எழுதப்பட்ட இலக்கண நூல்கள் தோன்றின என்பதையும் நாம் மனங் கொள்ள வேண்டும். இருபதாம் நூற்றாண் டின் ஆரம்ப தசாப்தங்களில் பழங்குடி மக்களின் மொழிகளை ஆராய்ந்து அவற் றுக்கான இலக்கணங்களை உருவாக்கும் முயற்சியே நவீன மொழியியலின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது என்பதும் கவனிக்கத்தக்கது.

பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரை இவ்வாறு தோன்றிய புற இலக்கணங்களை அவற்றின் தன்மை அடிப்படையில் மொழியியலாளர் பல்வேறு வகைப்படுத்தி நோக்குவர் (Crystal, 1989). மரபுவழி இலக்கணம் (traditional grammar) அல்லது புலமைசார் இலக்கணம் (scholarly grammar), வரலாற்று இலக்கணம் (historical grammar), ஒப்பியல் இலக்கணம் (comparative grammar), உசாத்துணை இலக் கணம் (reference grammar), விதிமுறை இலக்கணம் (prescriptive grammar), விளக்க முறை இலக்கணம் (descriptive grammar), கற்பித்தல் இலக்கணம் (pedagogical grammar ) என்பன இவற்றுட் சில.

**இலக்கண மரபு என்றால் என்ன?**

இதுவரை மொழியியல் நோக்கில் இலக்கணம் என்றால் என்ன என்பது பற்றிப் பார்த்தோம். இனி இலக்கண மரபு என்பது என்ன? அது எவ்வாறு உருவாகின்றது? அதில் எவ்வாறு மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதைச் சுருக்கமாக நோக்கலாம்.

இலக்கண மரபு என்பது வெவ்வேறு இலக்கண ஆசிரியர்கள் காலம்தோறும் ஒரு மொழியின் இலக்கண அமைப்பை எவ்வாறு விளக்கிவந்துள்ளார்கள், என்ன என்ன வகைப்பாடுகளை மேற்கொண்டார்கள், எத்தகைய கலைச் சொற்களைப் பயன்படுத்தினார்கள் போன்ற விடயங்களை

உள்ளடக்கும். இவ்வகையில் தமிழ் இலக்கண மரபு என்பது தொல்காப்பியர் முதல் இன்றுவரை நமது இலக்கணச் சிந்தனையில் காணப்படும் தொடர்ச் சியையும் வேறுபாடுகளையும் குறிக்கும். தமிழ் இலக்கண மரபில் பல பொதுப் பண்புகளையும், அதேபோல், பல வேறு பாடுகளையும் காண்கிறோம். தமிழ் இலக்கண மரபை தொல்காப்பியர் மரபு, வீரசோழியர் மரபு என இருவகைப் படுத்துவர். தொல்காப்பியர் மரபை தமிழுக்கே உரிய மரபு என்றும், வீரசோழிய மரபை வடமொழி மரபைத் தழுவியது என்றும் கூறுகின்றோம். தமிழ் இலக்க ணத்தை விபரிப்பதில் உள்ள வேறு பாடுகளே இதன் அடிப்படை. தொல்காப் பியரின் இலக்கண மரபே நன்னூல் வழியாக இன்றுவரை நமது இலக்கணச் சிந்தனையில் ஆட்சி பெற்றது எனலாம்.

ஒவ்வொரு இலக்கண ஆசிரியரும் உரையாசிரியரும் இலக்கணக் கூறுகளை, இலக்கண விதிகளை ஒரேமாதிரி விளக்குவதில்லை. சிலருடைய விளக்கம் நுட்பமும் தெளிவும் மிக்கதாகவும் சிலருடைய விளக்கங்கள் குழப்பம் தருவதாகவும் இருக்கலாம். ஒரே ஆசிரியரே ஓரிடத்தில் நுட்பமும் பிறிதோரிடத்தில் குழப்பமும் மிக்கவராக இருக்கலாம்.

அவ்வகையில் தமிழ் இலக்கண மரபை நாம் அவ்வாறே விழுங்க வேண்டியதில்லை. காலத்தின் தேவை அறிந்து, மொழி மாற்றத்தின் இயல்பை அறிந்து கொள்ள வேண்டியதைக் கொண்டு தள்ள வேண்டி யதைத் தள்ள வேண்டும்.

தமிழ் இலக்கண மரபில் இலக்கணம் என்ற சொல் ஒரு பரந்த பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. மொழியின் அமைப்பை மட்டுமன்றி இலக்கியத்தின் அமைப்பையும் அது உள்ளடக்குகின்றது. அவ்வகையில் தமிழ் இலக்கண மரபை நாம் ஐந்திலக்கண மரபு என்கிறோம். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன அவை. இவற்றுள் எழுத்தும் சொல்லும் மொழியின் அமைப்பையும், பொருள், யாப்பு, அணி என்பன இலக்கியத்தின் அமைப்பையும் விளக்கும். மொழியியல் நோக்கில் இலக்கணம் என்பது மொழியின் அமைப்பை மட்டுமே குறிக்கும். ஏனைய மூன்றும் பாவியல் (poetics) என்ற பிரிவில் அடங்கும்.

எழுத்திலக்கணம் மொழியின் ஒலி அமைப்பை விளக்கும் துறையாகும். தற்கால மொழியியலாளர் ஒலியியல் (phonetics) ஒலியனியல் (phonology), உருப ஒலியனியல் (morphophnemics) ஆகிய மூன்று பிரிவுகளில் ஆராயும் விடயங்களை தமிழ் இலக்கண நூல்கள் எழுத்திலக்கணம் என்ற பிரிவில் ஆராய்கின்றன. தமிழ் இலக்கண மரபில் எழுத்து என்பது ஒலிவடிவம், அதன் வரிவடிவம் ஆகிய இரண்டையும் குறிக்கும் ஒரு கலைச் சொல்லாகப் பயன்படுகின்றது. "மொழி முதற்காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து" என்று நன்னூல் கூறும்போது அது ஒலிவடிவத்தைக் குறிக்கின்றது. "தொல்லை வடிவின எல்லா எழுத்தும்" என்று அதே நூல் சொல்லும்போது அது வரிவடிவத்தைக் குறிப்பது தெளிவு.

தமிழ் இலக்கண நூல்கள் எழுத்திலக் கணத்தை விபரிப்பதில் பல பொதுத் தன்மைகளும் வேறுபாடுகளும் காணப்படு கின்றன. எழுத்தை உயிர் மெய் என்றும், உயிர் எழுத்தை குறில், நெடில் என்றும் மெய் எழுத்தை வல்லினம், மெல்லினம், இடையினம் என்றும் வகைப்படுத்தும் மரபு எல்லாத் தமிழ் இலக்கண நூல்களுக்கும் பொதுவானது என்று சொல்லலாம். ஆனால்

எழுத்தை முதல் எழுத்து சார்பெழுத்து என்று வகைப்படுத்துவதில் இலக்கண நூல்களுக்கிடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொல்காப்பியம் எழுத்தை, முதலெழுத்து சார்பெழுத்து என்று தெளிவாக வேறுபடுத்தவில்லை. தொல் காப்பியரைப் பொறுத்தவரை தமிழுக்கு அடிப்படையான முப்பது எழுத்து களும் தான் எழுத்தெனப்படும். அவற்றைச் சார்ந்துவரும் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றையும் தவிர்த்து எழுத்து முப்பது என்கிறது தொல்காப்பியம். அம் மூன்றையும் சேர்த்தால் முப்பத்திமூன்று ஆகும். இது பற்றிய தொல் காப்பியச் சூத்திரம் பின்வருமாறு.

எழுத்தெனப் படுப அகர முதல
னகர இறுவாய் முப்ப.்.தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே
(தொல். எழுத்து. சூத். 1)

குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்னும் அம்மூன்றும் "எழுத்தோரன்ன" எழுத்தை ஒத்தவை என்று கூறுகின்றது. இவை ஏன் எழுத்தை ஒத்தவை என்பதற்குச் சரியான விளக்கம் இல்லை. அதேவேளை, பிற்கால ஆசிரியர்கள் சார்பெழுத்துகள் எனக் கூறும் உயிர்மெய், ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், பற்றியெல்லாம் தொல்காப்பியம் கூறுகின்றது. ஆனால் அவற்றைச் சார்ந்துவரும் மரபுள் அடக்கவில்லை என்பது கவனத்துக்குரியது. தொல்காப்பியத்துக்குப் பின் தோன்றிய வீரசோழியமும் எழுத்துகளை முதல், சார்பு எனப் பிரிக்கவில்லை. தமிழ் நெடுங் கணக்கை அடிப்படையாகக் கொண்டு உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு, ஆய்தம் ஒன்று என மொத்தம் முப்பத்தி யொரு எழுத்துகளையே வீரசோழியம் கூறுகின்றது. இது வரிவடிவத்தை மட்டும் கருத்தில் கொண்ட வகைப்பாடு எனலாம். சார்பெழுத்துகள் என்று ஒரு தனி வகைப்பாடு வீரசோழியத்தில் இல்லை. எனினும், உயிர்மெய், உயிரளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகார, ஒளகாரக் குறக்கம் என்பன பற்றியும் வீரசோழியம் குறிப்பிடுகின்றது. நேமி நாதமும் எழுத்தை முதல் சார்பு என வகைப்படுத்தவில்லை. வீரசோழியம் போல் நெடுங்கணக்கு அடிப்படையில் உயிர், மெய், ஆய்தம் என்பவற்றை முதல் வைப்பாகக் குறிப்பிடுகின்றது. நன்னூலார் கூறும் ஆய்தம் தவிர்ந்த ஏனையவற்றையும் நேமிநாதம் குறிப்பிடுகின்றது. ஆனால் அவற்றைச் சார்பெழுத்து என்று வகைப் படுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இவற்றை அடுத்து வந்த நன்னூல்தான் எழுத்தை "முதல் சார்பென இருவகைத்து" என்றும் உயிரும் மெய்யுமாகிய முப்பதும் முதல் எழுத்து என்றும் உயிர்மெய் முதல் ஆய்தக் குறுக்கம்வரை சார்பெழுத்து பத்து என்றும் வரையறுத்தது. இது தொடர்பாக தொன்னூல் விளக்கம் நன்னூலை அப்படியே பின்பற்றியுள்ளது எனலாம். ஆனால் முத்துவீரியம் முதல், சார்பு என்ற வகைப்பாட்டை ஏற்றுக்கொண்டாலும் எது, முதல், சார்பு என்பதில் பெரிதும் வேறுபடுகின்றது. உயிரும் மெய்யும் முதல் எழுத்து என்ற வகைப்பாட்டை ஏற்றுக் கொள்ளும் முத்துவீரியம், உயிர் மெய்யையும் ஆய்தத்தையும் மட்டுமே சார்பெழுத்து என்று வகைப்படுத்துகின்றது. இது அடிப்படை எழுத்து, அடிப்படை அற்ற எழுத்து என்றவகையில் வரிவடிவத்தை அடிப்படையாகக்கொண்ட வகைப்பாடு என்பது தெளிவு. தமிழ் இலக்கண மரபில் சார்பெழுத்துக் கோட்பாடுபற்றி செ. வை. சண்முகம் (1980) விரிவாக விளக்கியுள்ளார். நவீன மொழியியலாளர் கூறும் ஒலியன் மாற்றொலிக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ்ஒலி அமைப்பை நோக்கும்போது

இன்றையத் தமிழைப் பொறுத்தவரை குழப்பமான சார்பெழுத்துக் கோட்பாட்டை நாம் கைவிட்டுவிடலாம்.

சொல்லிலக்கணத்தைப் பொறுத்த வரையில் கூட தமிழ் இலக்கண மரபில் பல வேறுபட்ட போக்குகள் உள்ளன. தொல்காப்பியம் சொற்களைப் பகுபதம், பகாப்பதம் என்று பகுத்து நோக்கவில்லை. நன்னூல்தான் அதைச் செய்கிறது. பகுபதத்தைக் கூறுபடுத்தி, பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என பகுபத உறுப்புகளாக வகைப்படுத்துதல் நன்னூலுக்குரியது. நாம் அதைத்தான் எவ்வித விசாரணையும் இன்றி இலக் கணம் கற்பித்தலில் இன்றும் பயன்படுத்துகிறோம். வீரசோழியம் இவ்வாறு பகுத்து நோக்க வில்லை. அது தாது, பிரத்தியம் என்று இரண்டு கூறுகளாகவே வகைப்படுத்து கின்றது. தாது என்பது அடிச்சொல். பிரத்தியம் என்பது ஒட்டுகள். நவீன மொழியியலாளர் உருபனியலில் இந்த முறையையே பயன்படுத்துகின்றனர்.

சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வட சொல் என்றும், பெயர், வினை, இடை, உரி என்றும் வகைப் படுத்தும் மரபு தொல்காப்பியத்தில் இருந்து தொடர்கின்றது. இத்தகைய வகைப்பாடுகள் எல்லாம் இன்றும் தேவையா? அல்லது போதுமா என்ற வினாக்கள் உள்ளன. தொல்காப்பியர் திசைச் சொல் என்பதை வட்டார வழக்குச் சொற்களைக் குறிப் பதற்கே பயன்படுத்தினார். அவருடைய காலத்தில் தமிழில் வடமொழி தவிர்ந்த பிறமொழிக் கலப்பு அரிதாக இருந்தது. ஆனால் நன்னூலார் காலத்தில் வேறு பல மொழிகளில் இருந்தும் தமிழில் சொற்கள் வந்து கலந்ததனால் “செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்தும் தம் குறிப்பினவே திசைச் சொற் கிளவி” (தொல். சொல். 400) என்ற தொல்காப்பியரின் வரையறையை நன்னூலார் விரிவுபடுத்தினார். செந்தமிழ் நிலம் சேர்ந்த பன்னிரண்டு நிலத்தில் மட்டுமன்றி வடமொழி தவிர்ந்த பதினெட்டு தமிழ் ஒழி நிலத்திலும் இருந்து வந்து தமிழில் வழங்கும் சொற்களையும் அவர் அதில் உள்ளடக்கினார் (நன். சூத். 273). சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனப் பிரிப்பதை விட. தமிழ்ச் சொல், அயற்சொல் என இரண்டாகப் பகுத்து நோக்கினால் போதும் என்பது தேவநேயப் பாவாணர் கருத்து (சண்முகம், 1984). அதுவே பொருத்தமாகத் தோன்றுகின்றது.

உரிச்சொல் என்ற வகைப்பாடு இன்று அவசியம் இல்லை, பெயரடை, வினையடை என்பன முக்கிய சொல்வகைகளாகச் சேர்க்கப்பட வேண்டும் எனப் பல அறிஞர் கள் கூறியுள்ளனர். அதுபோல் குறிப்பு வினை என்ற ஒரு வகைப்பாடு இன்றையத் தமிழுக்குத் தேவையில்லை என்ற ஒரு கருத்தையும் பலரும் தெரிவித்துள்ளனர். இவ்வாறு நோக்குகையில் தமிழ் இலக்கண மரபை நவீன மொழியியல் நோக்கில் பரிசீலிக்க வேண்டிய தேவை உள்ளது.

நமது இலக்கண ஆசிரியர்கள் பொதுவாக தமிழ்மொழி அமைப்பு பற்றிய மிக நுட்பமான நோக்கு உடையவர்களாகவே இருந்துள்ளனர். மொழி அமைப்பை விளக்குவதில் பல இடங்களில் அந்த நுட்பம் வெளிப்படுகின்றது. எனினும், அவர்களி டமும் சில சிக்கல்களும் உண்டு. அவற்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, தொல்காப்பியர் “நீயிர்” என்பதை “நும” என்பதன் திரிந்த வடிவமாக (நும்மின் திரிபெயர்) கொள்வதைக் குறிப்பிடலாம் (விளிமரபு, 145). நும் என்பதி

லிருந்து நீயிர் என்பதை அவர் வருவிப்பார். அதுபற்றிய அவரது சூத்திரம் பின்வருமாறு,

நும்மென் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே
அல்லதன் மருங்கில் சொல்லும் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இடை நிலையி ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பான் மொழிவயின் இயற்கை ஆகும்
(புள்ளி மயங்கியல், 326, 327)

நும் என்பதன் உ கெட்டு, ஈகாரம் வர, இடையில் இகரம் வந்து மகர ஈறு கெட்டு ரகரம் நிற்றல் வேண்டும் என்பது இதன் பொருள். தமிழ் மொழி அமைப்பைப் பொறுத்தவரை இது சாத்தியம் இல்லை. நீயிர் எழுவாய்ப் பெயர், நும் வேற்றுமை ஏற்கத் திரிந்த வடிவம். தமிழில் எழுவாய்ப் பெயரே வேற்றுமை ஏற்றுத் திரிபடையும். எடுத்துக்காட்டாக நான், என், யாம் ,எம், நாம், நம், தாம், தம், நீ ,உன். இவ்வகையில் நீயிர் என்பது தனித்து நிற்கின்றது. தமிழ் அமைப்பின் படி நும் என்பதன் எழுவாய் வடிவம் “நீம்” என்று இருந்திருக்க வேண்டும். தொல் திராவிடத்தில் நீம் என்ற முன்னிலைப் பெயர் புனரமைக்கப் பட்டுள்ளது. தற்காலத் திராவிட மொழிகள் பலவற்றில் அது வழக்கில் உண்டு. ஆனால் தொல்காப்பியத்திலோ, சங்க இலக்கியங் களிலோ நீம் இடம்பெறவில்லை. சில தமிழ்க் கிளைமொழிகளில் அது திசைச் சொல்லாக வழக்கில் இருந்ததாகத் தெரியவருகின்றது. இடைக்கால நூலான சீவக சிந்தாமணியில் நீம் இடம் பெற்றுள்ளது. அது கன்னடத்திலிருந்து கடன்வாங்கப்பட்டிருக்கலாம் என வேலுப் பிள்ளை (1966) கருதுகிறார். அவர் வரலாற்றுத் தமிழ் இலக்கணம் என்ற தனது நூலில் (பக். 96-97) இப்பிரச்சினை பற்றி ஓரளவு விரிவாகப் பேசியுள்ளார். வீரசோழியம் “நீங்கள்” என்ற முன்னிலை இரட்டைப் பன்மை வடிவத்தைத் தருகின்றது. இதன் அடிச்சொல் நீம் என்பதுதான் (நீம் +கள்). நீயிர் எப்படி வந்தது என்று தெரியவில்லை. சங்க இலக்கியத்தில் அது சிறுபான்மை வழக்கே. இது எவ்வாறாயினும் தொல்காப்பியர் நும் என்பதில் இருந்து நீயிர் என்பதை வருவிக்க முயல்வது தமிழ் மொழி அமைப்புக்கு முரணானது என்றே கூறவேண்டும். வரலாற்று மொழியியல், கிளைமொழியியல் ஆய்வுகள் இப்பிரச்சினையைத் தெளிவு படுத்த நமக்கு உதவும்.

நன்னூலில் இருந்தும் ஒரு உதாரணத்தை இங்கு நோக்கலாம். மையீற்றுப் பண்புப் பெயர்களை நன்னூலார் பகாப்பதம் என்பார். அவரது சூத்திரம் பின்வருமாறு

செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை உண்மை நுண்மை அவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே
(சூத். 135 )

தமிழ் இலக்கணக் கல்வியில் இன்றுவரை செல்வாக்குச் செலுத்திவரும் ஒரு சூத்திரம் இது. பாடசாலை மாணவர்களுக்கு இதன் அடிப்படையிலேயே கற்பிக்கின்றோம். நன்னூல் என்பதை நன்மை + நூல் என்று மாணவன் பிரித்தெழுதத் தெரிந்திருக்க வேண்டும் என்றும், மையீறு கெட்டு அது நன்னூல் எனப் புணர்ந்தது என்று கூறத் தெரிந்திருக்க வேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். நல்+நூல் என்று பிரிப்பது பிழை என்று கருதப்படுகின்றது.

நல் என்பதை அடிச்சொல்லாகவும் -மை என்பதைப் பண்புப்பெயர் விகுதியாகவும் ஏன் கொள்ளமுடியாது? நல்ல, நல்லோர், நன்று, நன்மை எல்லாவற்றிலும் நல் என்பதை அடிச்சொல்லாகக் கொள்வதில் பிரச்சினை எதுவும் இல்லை. உரையாசிரி யர்களுக்கு இது தெரியாமலும் இல்லை.

சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர் முதலிய உரையாசிரியர்கள் இவை சொல் நிலையில் பகுபதமாயியும் பொருள் நிலையில் பகாப்பதம் என்று அமைதிகாண முயல்வர். உரையாசிரியர்கள் இதற்குக் கூறும் விளக்கம் இவ்வாறு இருக்கின்றது.

"இங்ஙனம் கூறிய வாய்பாடு முதலிய வெல்லாம் சொல்நிலையால் பகுபதமா யினும் மைவிகுதிக்குப் பகுதிப் பொருளன்றி வேறு பொருள் இன்மையின் பொருள் நிலையால் பகுக்கப்படாது - பகாப்பத மாயிற்று"

உருபனியல் நோக்கில் இது ஏற்புடைய சமாதானம் அல்ல. சொல்நிலையில் பகுபதம் என்றால் அதைப் பகுபதமாகவே கொள்ள வேண்டும். பண்பு அடியைப் பண்புப் பெயராக்கும் உருபனியல் செயற்பாடு இங்கு மையீற்றுக்கு உண்டு. பண்பு அடியில் இருந்து மட்டுமன்றி பெயரடியில் இருந்தும் - மை ஈறுபெற்ற பண்புப்பெயர்கள் உருவாகின்றன. ஆண்மை, பெண்மை போன்றவை அத்தகையன. இவை எவ்வகை யிலும் பகாப்பதங்கள் அல்ல. அவ்வகையில் - மை ஈறு ஒரு உருபன் அல்லது விகுதிதான்.

நன்னூலார் மையீற்றுப் பண்புப் பெயர் களைப் பகாப்பதம் என்று கொண்டதனால் இவற்றுக்கென்று சிறப்பான புணர்ச்சிவிதி கூறவேண்டி ஏற்பட்டது. அச்சூத்திரம் பின்வருமாறு.

> ஈறு போதல் இடை உகரம் இய்யாதல்
> ஆதி நீடல் அடி அகரம் ஐயாதல்
> தன்னொற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
> இனம்மிகல் இனையவும் பண்புக்கு இயல்பே (சூத்.136 )

இந்தச் சிக்கலான விதி நன்னூலாரின் கெட்டித்தனத்தைக் காட்டுகின்றதே தவிர மொழியின் இயல்பை, அதன் எளிமையான உருபனியல் செயற்பாட்டைத் தெளிவு படுத்த உதவுவதில்லை. பதிலாக சிக்க லையும் குழப்பத்தையுமே ஏற்படுத்து கின்றது. உரையாசிரியர்கள் தரும் எடுத்துக் காட்டுகள் இத்தகையன. இங்கு இரண்டு எடுத்துக்காட்டுகளை மட்டும் பார்ப்போம்.

1. பைங்கிளி, பைங்கண்
2. சேதாம்பல்

பைங்கிளி, பைங்கண் என்பன முறையே பசுமை+ கிளி, பசுமை+கண் என்பனவற்றின் புணர்ச்சியாகக் கருதப்படுகின்றன. இது எவ்வாறு நிகழ்கின்றது? நிலைமொழியின் மை ஈறு கெட்டு, இடை உகரம் சகரத்துடன் கெட்டு, இனம் மிகுந்து, அடி அகரம் ஐகாரமாகிப் புணர்ந்தது என்று விளக்குவர். இது தேவையற்ற சுற்றிவளைப்பு. பை என்பது பழந்தமிழில் இருந்து வழங்கி வரும் ஒரு சொல். இதற்கு பசுமை, அழகு என்ற அகராதிப் பொருள் உண்டு. அவ்வகையில் பை + கிளி பைங்கிளி என்றும் பை + கண் பைங்கண் என்றும் புணர்ந்ததாகக் கொள்வது இலக்கணத்தை எளிமைப் படுத்தும். அதுவே மொழி இயல்புமாகும்.

சேதாம்பல் என்பதை செம்மை + ஆம்பல் என்பதிலிருந்து புணர்ச்சி விதிகள் மூலம் வருவிப்பது இதையும் விடச் சிக்கலானது. செம்மை என்பதன் மை ஈறுகெட்டு செம் ஆகி, அதன் ஆதி நீண்டு சேம் ஆகி, பின் மகரம் தகரமாகத் திரிந்து சேத் ஆகி, அது ஆம்பலுடன் சேர்ந்து சேதாம்பல் ஆயிற்று என்று விளக்குவர். இதுவும் தேவையற்ற ஒரு சுற்றிவளைப்பே. சேது என்ற சொல்லுக்கு சிவப்பு என்ற அகராதிப் பொருள் உண்டு. அவ்வகையில் சேது + ஆம்பல் சேதாம்பல் ஆயிற்று என்பது மிக எளிமையான விளக்கம். செம்மையில் இருந்து சேது என்பதை வருவிக்கவேண்டிய தேவை இல்லை.

## மரபும் மாற்றமும்

இறுதியாக இலக்கண மரபில் மாற்றத்துக் கான தேவை என்ன என்பது பற்றிச் சிறிது நோக்கலாம். தமிழ் இலக்கணச் சிந்தனை மரபு நன்னூலுக்குப் பின்னர் பெரிதும் தேக்கமடைந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். அதற்குப் பின்வந்த இலக்கண நூல்கள் எல்லாம் பெரும்பாலும் பழைய வற்றைத் திருப்பிக் கூறுவனவாகவே அமைந்தன. புதுமைகள் என்று எவையும் இல்லை.

ஆனால், தமிழ் மொழி தொடர்ந்தும் மாறிக்கொண்டே வந்திருக்கின்றது. அதிலும் குறிப்பாகக் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மாற்றம் மிகப் பெரியது. ஒருவகையில் இதைத் தலைகீழான மாற்றம் எனல் வேண்டும்.

19ஆம் நூற்றாண்டுவரை இருந்த தமிழ் முற்றிலும் செய்யுள் தமிழ் என்றே சொல்லவேண்டும். உரைநடைக்கான பயன்பாட்டெல்லை அக்காலத்தில் மிகவும் குறுகியதாகவே இருந்தது. ஆனால் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து உருவாகிவந்த தமிழ் முற்றிலும் உரை நடைத் தமிழ்தான். செய்யுளின் பயன்பாடு பெரிதும் குறுகிவிட்டது. 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை கவிதை எழுதுவதற்கு மட்டும் செய்யுள் பயன்படுத் தப்பட்டது. இன்று அதுகூட இல்லை. இன்றையத் தமிழ் முற்றிலும் உரைநடைத் தமிழ்தான். உரைநடையின் ஆதிக்கத் தினால் தமிழ் பெரிதும் மாற்றமடைந்து விட்டது. அவ்வகையில் தமிழின் எல்லா நிலைகளிலும் - அதன் ஒலியமைப்பு, புணர்ச்சி, சொல்லமைப்பு, வாக்கிய அமைப்பு முதலிய எல்லா நிலைகளிலும் - பெருமளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அவ்வகையில் இன்றையத் தமிழின் இலக்கண அமைப்பை விளக்குவதற்கு பாரம்பரிய இலக்கண எண்ணக் கருக்கள் பெருமளவுக்குப் பயன்படா. புதிய எண்ணக்கருக்களும் கலைச் சொற்களும் தேவைப்படுகின்றன. உதாரணமாக காலத்தை எடுத்துக்கொள்ளலாம். தமிழ் இலக்கண மரபில் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று காலப் பாகுபாடே உண்டு. வந்தான், வருகிறான், வருவான் என்ற முக்காலப் பாகுபாட்டைத் தாண்டி இன்றையத் தமிழில் காலப் பொருண்மை விரிவடைந்துவிட்டது. வந்து கொண்டிருந் தான், வந்துகொண்டிருக்கிறான், வந்து கொண்டிருப்பான் என்ற வகையில் தொடர் கால (continuous tense) வினைவடிவங்கள் உருவாகிவிட்டன. வந்திருக்கிறான், வந்து விட்டான், வரப்போகிறான், வரக்கூடும், வரலாம் என வெவ்வேறு காலப் பொருண்மை உணர்த்தும் துணைவினை (auxiliary verb) வடிவங்கள் உருவாகிவிட்டன. கண்டுபிடி, சுற்றிவளை, விட்டுக் கொடு, கைதுசெய், கேள்விப்படு, சரிபார் போன்ற கூட்டுவினை வடிவங்கள் (Compound verb) உருவாகி யுள்ளன. மரபுவழி இலக்கணங்களில் இப்புதிய மாற்றங்களை விளக்க இடமில்லை.

தமிழ் இலக்கண மரபு பெரிதும் சொல்லிலக்கண மரபுதான். வாக்கிய அமைப்பு பற்றிய சில செய்திகளையும் சொல்லிலக்கண அடிப்படையிலேயே அவை விளக்குகின்றன. மரபு இலக்கணம் கூறும் தொகாநிலைத் தொடர் பற்றிய செய்திகள் இன்றைய சிக்கலான வாக்கிய அமைப்பு பற்றி விளக்கப் போதுமானவை அல்ல. அதற்குப் புதிய இலக்கணச் சிந்த னையும், முறையியலும், கலைச் சொற்களும் தேவை.

தற்காலத் தமிழில் நிகழ்ந்துள்ள மொழி மாற்றங்களை உள்வாங்கி, புதிய தமிழின் அமைப்பு விதிகளை விளக்கும் புதிய இலக்கணம் தோன்ற வேண்டுமாயின் நவீன மொழியியல் சிந்தனையின் அடிப்படை யிலேயே அது நிகழவேண்டும். நவீன மொழியியல் மொழிபற்றிய அறிவியலாக இன்று பெருவளர்ச்சியடைந்துள்ளது. பண்டைய மரபுவழி இலக்கணச் சிந்தனை களில் காலுன்றி எழுந்த மொழியியல் சிக்கலான மொழி அமைப்பை நுட்பமாகப் பகுப்பாய்வு செய்து விளக்குவதற்குரிய ஆய்வுமுறைகளையும் உத்திகளையும், புதிய கோட்பாடுகளையும் இன்று வளர்த்துள்ளது. அதன் வெளிச்சத்தில் தமிழ் இலக்கண மரபின் நிறைகுறைகளை இன்று நாம் மதிப்பிட முடிகின்றது. தமிழுக்கு மொழியியல் அறிமுகமாகி அரை நூற்றா ண்டுக்கு மேலாகின்றது. மொழியியல் நோக்கில் தமிழ் ஆய்வுகள் பல நடந் துள்ளன. அவை பெரிதும் ஆங்கிலத் திலேயே நிகழ்ந்துள்ளதால் அவற்றின் பயன் இன்னும் தமிழில்வந்து சுவறவில்லை. தமிழறிஞர் மத்தியில் பழமை நோக்கும் மரபு வழிபாடும் சற்று முனைப்பாகவே இருப்பதும் தமிழாய்வில் மொழியியல் சிந்தனை செல்வாக்குப் பெற முடியா மைக்கு ஒரு காரணமாகும். இது எவ்வாறா யினும், தமிழ் இலக்கண ஆய்வின் எதிர்கால முன்னேற்றம் மொழியியல் சிந்தனைகள் உள்வாங்கப்படுவதிலேயே தங்கியுள்ளது என்பதே தமிழ் மொழியியலாளர்களின் கருத்தாகும்.

**உசாத்துணைகள்**


ஆறுமுகநாவலர். (1993). *தமிழ் இலக்கணம் (இலக்கணச் சுருக்கம்).* சென்னை: முல்லை நிலையம்.

இராசாராம், சு. (1992). *வீரசோழிய இலக்கணக் கோட்பாடு.* நாகர்கோயில்: இராகவேந்திரா.

சண்முகம், செ. வை. (1980). *எழுத்திலக்கணக் கோட்பாடு.* அண்ணாமலை நகர்: அனைத் திந்தியத் தமிழ் மொழியியல் கழகம்,

சண்முகம், செ. வை. (1984). *சொல்லி லக்கணக் கோட்பாடு-1.* அண்ணாமலை நகர்: அனைத்திந்தித் தமிழ் மொழியியல் கழகம்,

தண்டபாணிதேசிகர், ச. (1971). *நன்னூல் விருத்தியுரை.* சென்னை: பாரிநிலையம்.

*தொல்காப்பியம்-சொல்லதிகாரம்* (1962). (நச்சினார்க்கினியர் உரை). தஞ்சாவுர்: வெற்றிவேல் அச்சகம்.

*தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்* (1991). (இளம்பூரணர் உரை). சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

நு்.மான், எம். ஏ. (2002). *ஆரம்ப, இடைநிலை வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தல் - ஒரு மொழியியல் அணுகுமுறை.* கொழும்பு: கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

வேலுப்பிள்ளை, ஆ. (1979). *தமிழ் வரலாற்றிலக்கணம்.* கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

Crystal, D. (1989). *The Cambridge Encyclopedea of Language*. Cambridge: Cambridge University Press.

Hockett, Charles, F. (1970). *A Course in Modern Linguistics*. New Delhi: Oxford & IBH Publishing Co.

Marckward, Albert, H. (1973). Linguistics and Instruction in the Native Language in Archiballd, A. Hill, (ed.). *Linguistics* USA: America Forum.

Palmer, Frank. (1971). *Grammar.* England: Penguin Books.